**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

முன்னிலை:– **திருமதி. S.ஆனந்தவல்லி,B.A.,B.L.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை.

2025 ம் ஆண்டு ஜீன் மாதம் 5 ம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண். 8/2025

உள்

அசல் வழக்கு எண். 71/2021

1. அசன் பாரூக்
2. அஸ்மாபீவி
3. பரக்கத்நிஷா
4. ரஹீம்பானு ...... மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிரிடை/**

1. தாஜீதீன்
2. ஹமீதாபீவி
3. காதர்நிஷா
4. முகமது ஹனிபா
5. சைதாபானு
6. ஜமாலியா பானு
7. சார்பதிவாளர் (பத்திரங்கள்பதிவு)
8. தமிழ்நாடு அரசு அதன் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம். ...... 1 முதல் 8 திர்மனுதாரர்கள்/ 1 முதல் 8 பிரதிவாதிகள்

9. E.P.S.பாத்து முத்து
10. அன்வர் பாட்ஷா
11. காசிம் முஸ்தபா
12. முகம்மது சைபுல்லா
13. ஜீனத் பீவி
14. பாத்திமா கனி
15. ஜெசிமா பீவி
16. பாத்திமாகனி
17. அப்ரின் பானு
18. பௌசியா பேகம்
19. சுமையா
20. சபியா
21. முகம்மது ஆசிப்

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

22.சுமானா ...... 9 முதல் 22 எதிர்மனுதாரர்கள்/
சேர்க்கப்படவேண்டிய
9 முதல் 22 பிரதிவாதிகள்.

இம்மனுவானது கடந்த 10.02.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 03.06.2025ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் P.தேரிராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் B.திருப்பதி அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 8 பிரதிவாதிகள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினராக ஆக்கப்பட்டுள்ள நிலையில், 9 முதல் 15 மற்றும் 21,22 எதிர்மனுதாரர்கள்/9 முதல் 15 மற்றும் 21,22 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக ஆக்கப்பட்டுள்ள நிலையில், 16 முதல் 20 எதிர்மனுதாரர்கள்/16 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் G.திருமுருகன் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும் .....

<u>உத்தரவு</u>

மனுவில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டிய விபரத்தில் கண்டுள்ளபடிக்கு அசல் வழக்கானது பிராதை திருத்தம் செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி உ.வி.மு.ச. கட்டளை 6 விதி 17 மற்றும் 18 பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம்</u>:-

(1) அசல் வழக்கில், 9 முதல் 22 பிரதிவாதிகளைச் சேர்க்க இடைமனு எண்.1/2024 தாக்கல் செய்யப்பட்டதில் கடந்த 23.01.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டுவிட்டது. மைமூன்பீவியின் மக்களும் மனுதாரர்/வாதி கணவர்

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

சாகுல்ஹமீதுடம் பிறந்த அபுபக்கர், அப்துல்லா, ஹபீப் முகமது அவர்களின் வாரிசுகளாவார்கள். தாவாச் சொத்து மனுதாரர்/வாதி கணவருக்கு வாய்மொழியாக ஒதுக்கப்பட்டு தனித்து பாத்தியப்பட்டது என்பதனால் பிராதில் மைமூன்பீவிக்கு மனுதாரர்/வாதி கணவர் மட்டுமே வாரிசாக தெரிவித்திருந்தோம். மனுதாரர்/வாதி கணவரின் சகோதரர்கள் அபுபக்கர், அப்துல்லா, ஹபீப் முகமது அவர்களது வாரிசுகளான 9 முதல் 22 எதிர்மனுதாரர்களுக்கு வேறுசில சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளதால் தாவாச் சொத்தில் அவர்களுக்கு எந்தவித பாத்தியம் இல்லை என்பதால் அசல் வழக்கில் அவர்களைச் சேர்க்கவில்லை என்பது குறிப்பிடதக்கது.

(2) 9 முதல் 22 வரை பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் குறித்த விளக்கம் தாவா வழக்கில் அவசியமானது என்பதனால் அவர்களை சேர்க்கவும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் உட்பிரிவுகள் குறித்த விபரங்களையும் பிராதில் தெரிவிக்க வேண்டி அசல் வழக்கனாது பிராது திருத்தப்பட வேண்டியது அசியமும், நியாயமானதுமாகும். பிராதில் கோரும் திருத்தங்களால் வழக்கின் தன்மையிலோ, வழக்குமூலத்திலோ மாற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை. எனவே, மனுவில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டிய விபரத்தில் கண்டுள்ளபடிக்கு அசல் வழக்கானது பிராதிகளை திருத்தம் செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல்.

3. <u>1 எதிர்மனுதாரர்/1 பிரதிவதி தாக்கல் செய்த மறுப்புரையின் சுருக்கம்:</u>–

(1) அசல் வழக்கில், 9 முதல் 22 எதிர்மனுதாரர்கள்/9 முதல் 22 பிரதிவாதிகளை அசல் வழக்கில் சேர்க்க இடைமனு எண்.7/2024 மனுதாக்கல் செய்யப்பட்டு கடந்த 23.01.2024ம் தேதி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது எதிர்மனுதாரால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேற்படி இடைநிலை மனு

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

எண்.7/2024 மனுவின் உத்தரவினை தொடர்ந்து மனுவில் கண்ட சீர்திருத்த விபரத்தில் கண்ட பாரா 1,2 ல் கூறப்பட்டுள்ள சீர்திருத்தங்களை அசல் வழக்கில் சீர்திருத்தம் செய்துகொள்ள எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபணை இல்லை.

(2) மனுவில் கண்ட சீர்திருத்த, விபர பாரா 3–ல் கண்டுள்ள சங்கதிளை அசல் வழக்கில் சீர்திருத்தம் செய்ய மனுதாரர்கள் எவ்வித அனுமதியும் சமூகம் நீதிமன்றத்தில் பெறவில்லை. மேற்படி சீர்திருத்தம் செய்வதனால் வழக்குமூலம், வழக்கின் பொருண்மைகள் அனைத்தும் மாறக்கூடியவை. மேற்படி சீர்திருத்தத்திற்கு மனுதாரர்கள் தனியாக மனுத்தாக்கல் செய்து அனுமதி பெற வேண்டும். மனுதாரர்கள் பிராது தாக்கல் செய்த போது மைமூன்பீவிக்கு சாகுல்ஹமீது மட்டுமே வாரிசு என கூறி வழக்கு தாக்கல் செய்து விட்டு தற்போது மைமூன்பீவி வாரிசுகளும் தாங்களும் வாய்மொழி பாகபிரிவினை மூலம் பிரத்ததில் தாவாச் சொத்து சாகுல்ஹமீதுவிற்கு ஒதுக்கப்பட்டு அனுபவத்தில் உள்ளது என கூறுவதன் மூலம் வழக்கு சங்கதிகள் முதலும் மாறுபட கூடியதாக உள்ளது. மேற்படி சீர்திருத்தம் செய்ய CRP (MD) No.2106/2024 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவில் கூறப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனுவினை 1ம் எதிர்மனுதாரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகும்.

4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சினை</u> :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?, இல்லை? என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டிய ஆகும்.

<u>தீர்வு:–</u>

(5) மனுதாரரின் மனு மற்றும் 1ம் மனுதாரரின் மறுப்புரை பரிசீலிக்கப்பட்டது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

(6) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

(7) மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கேட்கப்பட்டது., ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. 2 முதல் 15, 21, 22 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக உள்ளனர். 16 முதல் 20 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் மட்டும் எதிர்உரை தாக்கல் செய்துள்ளார். சீர்திருத்த விபரத்தில் குறிப்பிட்டுள்ள பாரா 1,2–ன் உள்ள சீர்திருத்தங்களை அசல் வழக்கில் சீர்திருத்தம் செய்துகொள்ள எவ்வித ஆட்சேபணை இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. பாரா 3–ல் கண்டுள்ள சங்கதிகளை சீர்திருத்தம் செய்தால் வழக்கின் பொருண்மைகள் மாறக்கூடும் என மனுவை தள்ளுபடி செய்யக் கேட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(8) மனுவை பரிசீலனை செய்ததில் 9 முதல் 22 வரையிலான எதிர்மனுதாரர்கள் வழக்கின் அவசியமான தரப்பினர்கள் சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்து இடைநிலை மனு எண். 1/24–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2 முதல் 22 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவை அனுமதிக்க எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படவில்லை.

(9) பாரா 3–ல் கண்டுள்ள சங்கதிகளைப் பார்க்கும் போது, அசல் வழக்கின் தாவாச் சொத்து சர்வே எண்ணை பொறுத்து 9 முதல் 22 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்படவில்லை என்றும், 9 முதல் 22 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதாக விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்கொண்டு பரிகாரம் எதுவும் மனுதாரர்கள் தரப்பில் கேட்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

(10) Order 6 Rule 17 & 18 CPC –ன் படி வழக்கின் எந்த நிலையிலும் பிராதினை திருத்த மனு தாக்கல் செய்யலாம். ஆனால், மேற்படி திருத்தம் வழக்கின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அவசியமானதாக இருக்க வேண்டும். மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் அவசிய தரப்பினர்களை சேரக்க மனு தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. 1ம் எதர்மனுதாரர் தரப்பில், அந்த சங்கதிகளைப் பொறுத்து முன்பே அனுமதி பெறவில்லை. எனவே, மனுவை 3–வது பாராவைப் பொறுத்து தள்ளுபடி செய்ய கேட்டுள்ளது ஏற்க கூடியதல்ல என்றும், மனுவில் பாரா 3–ல் உள்ள சங்கதிகளால் அசல் வழக்கின் வழக்குமூலம் மற்றும் பொருண்மைகளில் மாற்றம் ஏற்படவில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, மேற்கண்ட விவாதங்களிலிருந்து மனுவை அனுமதிப்பதால் வழக்குமூலம் மற்றும் பொருண்மைகளில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்றும், வழக்கின் பிரச்சினைகளை தீர்க்க அவசியமானதாக இருக்கும் என்றும் தெரியவருகிறது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது, செலவுத்தொகை இல்லை.

மேற்படி உத்தரவு என்னால் சொல்லப்பட்டு. சுருக்கெழுத்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2025ம் ஆண்டு ஜீன் மாதம் 5ம் நாள் பகரப்பட்டது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

------------------------

மு.மா.உ.நீ. அருப்புக்கோட்டை,
இடைநிலைமனு எண்.8/2025
உள்
அசல்வழக்கு எண்.71/2025

சீரான/வரைவு உத்தரவு
நாள் 05.06.2025

------------------------